Book 19

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# தங்கள் செல்வத்தையும், உழைப்பையும் வீணாக்கும் ஹஜ் யாத்திரீகர்கள்



மார்ச்
2001
March

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........................................................................ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........................................................ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........................................ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ............................................................19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 .............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ........................................................................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 ..................................................................................... 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ........................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ..........................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன .............................................. 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................. 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 2

மார்ச் 2001
நினைவு 2


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஃசைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ ஒரு கேள்வித்தாள்

★ செல்வத்தையும் உழைப்பையும் வீணாக்கும் ஹஜ் யாத்திரீகர்கள்

★ மகளுக்கு கடிதம்

★ ஹதீஸ் கமாலுதீனுடன் நேருக்கு நேர்

# ஒரு கேள்வித்தாள்

அரேபியர்களைத் தங்கள் மார்க்க முன்னோடிகளாகக் கருதி அவர்களுக்குத் தகாத கண்ணியம் கொடுத்து வரும் பாமர முஸ்லிம்கள் கீழ்கண்ட கேள்விகளை அவர்களிடம் கேட்டால். அவர்கள் கூறும் பதில்களிலிருந்து அவர்களைப் பற்றிப் புரிந்து கொள்ளக்கூடும்.

1 குர்ஆனின் முதல் திருவசனமான 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மனிர்ரஹீம்' என்ற வாசகத்தில் இடம்பெறும் அரபி எழுத்துக்கள் எத்தனை? (பல வருடங்களாக இதனை எண்ணிக் கொண்டிருக்கும் இஸ்லாமிய அறிஞர்களில் சிலர் 18 என்பர். மற்ற சிலர் 21 என்பர். இன்னும் சிலர் 20 அல்லது 22 என்பார்கள்! ஆனால் நிச்சயம் 19 இல்லை என்பதில் உறுதியாக இருப்பார்கள்!)

2 குர் ஆனில் எத்தனை அத்தியாயங்கள் உள்ளன? (வியப்புக்குரிய விதமாக சில அறிஞர்கள் 113 என்று கூறுவர். 9வது அத்தியாயத்தில் 'பிஸ்மி' இடம் பெறாததால் அது 8வது அத்தியாயத்தின் தொடர்ச்சி என்று சிலரும் 10ஆம் அத்தியாயத்தின் துவக்கம் என்று சிலரும் கூறுவர்).

9வது அத்தியாயத்தின் துவக்கத்தில் ஏன் பிஸ்மி' இடம்பெறவில்லை? (குறிப்பு |14 = 19 x 6!)

3 ஹதீஸ்களின் அடிப்படையில், இறைவன் 50 வேளைத் தொழுகையைக் கடமையாக்கியதாகவும். பிறகு மூஸாவின் ஆலோசனைப்படி முஹம்மத் இறைவனிடம் மன்றாடி 5 வேளைகளாகக் குறைத்து வாங்கியதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் முதலில் முஹம்மத் 50 வேளைத் தொழுகையைப் பெற்றுக் கொண்டார் அல்லவா? இப்போது. கேள்வி இதுதான். ஒரு நாளைக்கு 50 வேளைத் தொழுகை என்றால் எவ்வளவு நேரத்திற்கு நாம் ஒரு தொழுகையை நாம் தொழவேண்டும் தெரியுமா?

(இரவிலும் பகலிலும் தொடர்ந்து 25 நிமிடத்திற்கு ஒரு தொழுகை. உறங்க முடியாது. உண்ண முடியாது!)

4 அரபிகளின் ஷரீஅத் சட்டப்படி. ஒரு பெண்ணின் ஒரு விரலை வெட்டினால் அவளுக்குப் பத்து ஒட்டகங்கள் நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டும். இருவிரல்களுக்கு இருபது ஒட்டகங்கள். மூன்று விரல்களுக்கு முப்பது ஒட்டகங்கள், ஆனால் நான்கு விரல்கள் வெட்டப்பட்டால் 20 ஒட்டகங்கள்தான் நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டும். அதாவது, ஒருவன் மூன்று விரல்களை தவறுதலாக வெட்டிவிடும் போது மேலும் ஒரு விரலையும் சேர்த்து வெட்டிவிட்டால் தண்டம் குறைந்து விடும் அல்லவா?

5 2002ஆம் ஆண்டில் ரமலான் மாதம் எந்த நாளில் துவங்கும்?

6 முஹம்மத் நபி தன் 25வது வயதில் தன்னை விட 15 வயது அதிகம் கொண்ட விதவையான 40 வயது கதீஜா அவர்களை முதல் மனைவியாக திருமணம் செய்தார்கள்.

கதீஜா அம்மையார் வாழ்ந்து மறையும் வரை நபி வேறு பெண்ணை மணக்கவில்லை என்கிறது ஹதீஸ்.

நபியை அப்படியே பின்பற்றுவதாகக் கூறுவோர் எவர் ஒருவரும் இப்படி செய்யாமல் வயது குறைந்த பெண்ணையும், மேலும் முதல் மனைவி உயிருடன் இருக்கும் போதே பல பெண்களையும் மணந்து கொள்கிறார்களே ஏன்?

7 அரபியர்களின் கட்டுக்கதைகளின்படி இமாம் இப்னு ஹம்பல் ஒரு லட்சம் ஹதீஸ்களை அறிவிப்பாளர் வரிசையுடன் மனனம் செய்திருந்ததாகக் கூறப்படுகிறது. அவை எத்தனை புத்தகங்கள் கொண்டது? இதற்கு அவருக்கு எத்தனை காலம் ஆனது? முக்கியமாக, அந்த ஹதீஸ்களெல்லாம் என்னவானது? எங்கே போனது?

8 நபியை நாம் அப்படியே பின்பற்றவேண்டும் என்று அரபியர்கள் கூறுகின்றனர். மேலும் அவர்கள் நபி எழுதப்படிக்கத் தெரியாதவர் என்றும் கூறுகின்றனர். அரபியர்களும் இந்த முன்னுதாரணத்தைப் பின் பற்றுகிறார்களோ? எனவேதான் 19ன் அடிப்படையிலான அற்புதக் கணிதக் கட்டமைப்பைப் புரிந்து வியக்க முடியவில்லையோ? மேலும், நபியின் விரோதியான அபூலஹபும் கூட தாடி வைத்திருந்தான் என்பதை இவர்கள் அறிவார்களா? பார்க்க | 7:146 | 17:45 | 18:57 | 27:82-84 | 47:38 |

## நீங்கள் கடவுளை நம்புகிறீர்களா இல்லையா?

- கடவுள் குர்ஆனை முழுமையானது என்கிறார். 16:115
- கடவுள் குர்ஆனை அனைத்தையும் கொண்டது என்று கூறுகிறார். 6:38
- கடவுள் குர்ஆனை விவரிக்கப்பட்டது என்று கூறுகின்றார் 6:114
- கடவுள்தான் குர்ஆனைக் கற்றுக் கொடுக்கின்றார். 55:1-2
- கடவுள்தான் குர்ஆனை விளக்குகின்றார் 75:19
- கடவுள் மிகச்சிறந்த 'ஹதீஸை' (குர்ஆனை) இறக்கியருளினார் 39:23
- முஹம்மத் நபியின் ஒரே பணி குர்ஆனை மக்களிடம் சேர்ப்பிப்பது மட்டுமே 13:40

- குர்ஆனைத் தவிர வேறு எதனையும் மார்க்கச் சட்டமாகக் கூறக்கூடாது என்று முஹம்மத் நபிக்கு இறைவன் கட்டளையிடுகின்றார். 69:38-47

- சரணடைதல் (இஸ்லாம்) என்ற மார்க்கத்தின் பிதா இப்றாஹீம் ஆவார். 22:78

- சரணடைதல் (இஸ்லாம்) என்ற மார்க்கத்தின் சடங்குகள் இப்றாஹீமால் பெறப்பட்டு அன்று முதல் இன்று வரை நிலைநாட்டப்பட்டதாக உள்ளது 2:135 3:67-68 16:123 2:127-128 2:43 2:125 21:72-73 2:187 22:26-27

## அப்படியானால் நமக்கு ஹதீஸ் மற்றும் சுன்னாவின் தேவை என்ன?

கடவுளின் வார்த்தைகளில் உண்மையான நம்பிக்கை கொண்டவர்களுக்கு 'ஹதீஸ் மற்றும் சுன்னா' வைப் பின்பற்றுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. முஹம்மத் நபியின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களுக்கும் முஹம்மதுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

கடவுள் குர்ஆனில் கூறுபவற்றை நம்ப மறுத்து நிராகரித்தாலே அன்றி நீங்கள் ஹதீஸ்களைப் பின்பற்ற முடியாது.

நீங்கள் குர்ஆனையும் ஹதீஸ்களையும் சேர்த்து நம்ப முடியாது. ஹதீஸ்களை நம்பினால் நீங்கள் குர்ஆனை மறுக்கின்றீர்கள். மேலும் நீங்கள் குர்ஆனை நம்பினால் ஹதீஸ்களை நிராகரிக்க வேண்டும்.

# தங்கள் செல்வத்தையும், உழைப்பையும் வீணாக்கும் ஹஜ் யாத்திரீகர்கள்

39வது சூராவின் வசனங்கள் 62-67 இறைவனுக்கு இணைவைக்கக்கூடிய மனிதர்களின் நற்செயல்கள் எத்தனை பெரியதாக இருந்தாலும் சரி. அவையாவும் வீணாகவே. பலனளிக்காமலே போகும் என்பதை நமக்கு அறிவிக்கின்றது. அம் மனிதர் தொழக்கூடியவராக. நோன்பு வைக்கக் கூடியவராக, ஏராளமான தர்ம காரியங்கள் செய்யக் கூடியவராகவும், இருந்தபோதிலும் இணைவைக்கும் செயல்களைச் செய்வாராயின், அச்செயல்கள் அவருடைய நற்செயல்கள் அனைத்தையும் இல்லாதது போல் செல்லாததாக்கிவிடும்.

இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் தங்களுடைய இரட்சகரின் கட்டளையை நிறைவேற்ற, ஹஜ் பயணம் செய்வதற்காக தாங்கள் வாழ்நாள் முழுவதும் சேமித்த பணத்தைச் செலவழித்து ஏராளமான சிரமங்களையும் மேற்கொள்கின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக, இன்றைய முஸ்லிம்களை அவர்கள் பின்பற்றும் பாரம்பர்யச் செய்திகளான ஹதீஸ்கள். அவர்கள் இறைவனுக்காக மக்காவுக்குச் செல்லும் (ஹஜ்ஜின்) போது மதீனாவில் உள்ள நபியின் சமாதியையும் தரிசிக்கும்படி வழிகாட்டுகின்றன. அங்கே அவர்கள் ஒன்றுமில்லாத ஒன்றின் 40:74 மேல் தங்களுடைய இதயபூர்வமான அன்பையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தித் தெளிவான இணைவைக்கும் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். ஹதீஸ்களின் அடிப்படையில் அந்தச் சமாதியில் முஹம்மத் நபி உயிருடன் இருப்பதாகவும். செவியேற்பதாகவும் நம்புகின்றனர். மேலும் அவர்களுடைய உடலை மண். அரித்திருக்காது என்று நம்பும்படியும், ஹதீஸ்கள் அவர்களுக்கு வழிகாட்டுகின்றன.

முஹம்மத் நபி இறந்து விட்டார் என்று குர்ஆன் நமக்குத் தெளிவாகச் கற்றுத் தருகின்றது. 39:30 நம்மைப் பற்றியோ நம்முடைய அழைப்புக்களையோ அறியாமல் இருக்கின்றார் 5:109 16:21 & 23:100 நமக்குப் பதிலளிக்க முடியாதவராக இருக்கின்றார் 35:14 என்பதைக் குர்ஆன் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்குகின்றது.

இறைவனின் வழிகாட்டுதலுக்கு மாறாகச் செயல்பட்டு குர்ஆனின் கட்டளைகளைப் புறக்கணிப்பது இறைவனுக்கும் அவருடைய தூதரான

முஹம்மதுக்கும் காட்டப்படும் எதிரப்பும், அவமரியாதையாகவும் மட்டுமே ஆகும் என்பதை நாம் கூறத் தேவையில்லை.

ஹதீஸ்களின் அடிப்படையில் மதினாவுக்குச் செல்லும் முஸ்லிம் ஹஜ் பயணிகள், தங்கள் ஹஜ்ஜின் பலனை இழந்து அதனை வீணாக்கியதோடு மட்டுமல்லாமல். தங்களுடைய செல்வத்தையும், உழைப்பையும் வீணாக்கியவர்களாகவே வீடு திரும்புகின்றார்கள்.

39:62-67 ல் நாம் கற்றுக் கொள்வதன்படி நம்முடைய வழிபாடு இறைவனுக்கு அவருக்கு மட்டுமே உரித்தானதாக இருக்க வேண்டும்.

இறைவனின் வார்த்தைகளான அல்குர் ஆன் ஒரே ஒரு புனிதப்பள்ளியைப் பற்றி மட்டுமே பேசுகிறது. (மக்கா - மஸ்ஜிதுல் ஹராம்) ஆனால் அதே சமயம் முஸ்லிம்கள் இரு புனிதப் பள்ளிகள் என்று பேசுவார்கள். (மக்கா - மதீனா - மஸ்ஜிதுல் ஹரமைன்) தெளிவாக இணைவைக்கும் விதத்தில், முஸ்லிம்கள் முஹம்மதின் சமாதியை மற்றுமொரு புனிதப்பள்ளியாக்கி விட்டார்கள்.

இது, குர்ஆனுக்கெதிரான மிகப் பெரும் நிந்தனையாகும். இறைவனின் விதிவசப்படி, இச்செயல் அவர்கள் நம்பிப் பின்பற்றும் ஹதீஸ்களுக்கும் முரணானதாகும். இதோ அந்த ஹதீஸ்

وا بور أنبيائهم ماجدالسنة الله على اليهود والنصارى

Translation: “God has cursed the Jews and Christians, because they turned the tombs of their prophets into mosques”!!!

இதன் மொழிபெயர்ப்பு : 'தங்களுடைய நபிமார்களின் சமாதிகளைப் பள்ளிகளாக மாற்றியதால் இறைவன் யூதர்களையும், கிறித்துவர்களையும் சபித்தார்' (புகாரி. நவவீ ஆங்கிலம் 6ஆம் பதிப்பு, வால்யூம் 6, பக்கம் 14)

✪✪✪

# மகளுக்கு கடிதம்

1000 மைல்களுக்கு அப்பால் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கும் மகள் நூரியா. தன் தந்தைக்கு மார்க்க விஷயம் பற்றி விளக்கம் கேட்டு கடிதம் மூலம் கேள்வி எழுப்புகிறார்.

கேள்வி :

1) பெண் ஆணைவிட பலவீனமான படைப்பா?

2) ஒரு பெண்ணும் ஒரு ஆணும் தனித்திருந்தால் அங்கே சைத்தான் புகுந்து விடுகிறான்! என்பது உண்மையா?

3) நரகத்தில் ஆண்களைவிட பெண்களே அதிகம்பேர் இருந்ததை நான் கண்டேன் என்று நபி கூறியதாக ஹதீஸ் இருக்கிறதா?

அன்பு மகள் நூரியாவிற்கு அன்புள்ள உனது தந்தை எழுதிக் கொள்வது. ஸலாமுன் அலைக்கும். கடந்த மாதம் என்னுடைய பதில் கடிதத்தில், நடைமுறையிலுள்ள 5 கலிமாவும் குர்ஆனில் இல்லை என்பதற்கான விளக்கம் எழுதியிருந்தேன். அந்த விளக்கம் ரொம்ப திருப்தியாக இருந்தது என்று எழுதியிருந்தாய். சந்தோஷம்.

நல்லது மகளே இம்மாத கடிதத்தில் நீ கேட்டிருக்கும் மார்க்க சம்பந்தமான 3 கேள்விகளுக்கும் இறைவன் உதவிகொண்டு முடிந்தவரை விளக்குகிறேன்.

நீ கேட்டிருக்கும் மூன்று விஷயங்களும் ஹதீஸ்களில் இருக்கத்தான் செய்கிறது. பெண்ணினத்தைக் கேவலப்படுத்தி, அடிமைப்படுத்தி, அடக்கியாள - அக்கால ஆண்வர்க்கமும். ஆட்சியாளர்களும் திட்டமிட்டு ஏற்படுத்திய கதைகள் - தான் இவை. பெண்களை இழிவுபடுத்தும் இதைப் போன்ற ஹதீஸ்கள் நிறைய இருக்கின்றன. மொத்த ஹதீஸ்களும் பொய்களைக் கொண்டு - இட்டுக்கட்டப்பட்டவைகள் தான் என்று நான் ஏற்கனவே உனக்கு - தெளிவுபடுத்தியிருக்கிறேன். எனினும் இவை மூன்றுக்கும் குர்ஆன் என்ன - கூறுகிறதென்று.... பார்ப்போம் மகளே!

## உனது முதல் கேள்வி : பெண் ஆணைவிட பலவீனமான படைப்பா?

விளக்கம் : நிச்சயமாக இல்லை. இருவரும் சமம்தான். பலம், பலவீனம் என்பது உடல்வலுவைக் கொண்டு மட்டும் கணக்கிடுவது அல்ல. வெளிப்பார்வைக்கு பெரிய அளவுள்ள வலுவான உடலை பெண்களைவிட ஆண்கள் பெற்றிருந்த போதிலும், அறிவுத்திறன், உள்ளத்தின் உறுதி. சாமர்த்தியம். விஞ்ஞான, தொழில் நுட்பங்களை கற்றுக் கொள்ளுதல். அவற்றை கையாளுதல் இவை போன்ற அனைத்திலும் பெண்கள் ஆண்களுக்கு (இணையாகவும், சிலவற்றில் மேலாகவும் இருக்கவே செய்கிறார்கள்.

மனிதன் பலவீனமானவன் என்று குர்ஆன் கூறுகிறதே தவிர பெண் பலவீனமானவள் என்று கூறவேயில்லை.

பொதுவாக பெண்ணினம் பலவீனமாக காணப்படுவதற்கு காரணம் பல நூற்றாண்டுகளாக பெண்களை ஆண்கள் அடிமைகளாகவும். போகப் பொருளாகவும் கல்வி பெறாத மூடர்களாகவும் நடத்தி வந்திருப்பதன் பாதிப்புத்தான். உண்மையில் ஆணும் பெண்ணும் சமமானவர்களே.

மேலும் ஏராளமான குர்ஆன் வசனங்கள் ஆண், பெண் இருவரையும் சமத்துவப்படுத்தியே குறிப்பிடுகிறது.

### குர்ஆன் வசனங்கள்

- திருடனோ, திருடியோ தண்டிக்கப்பட வேண்டியவர்களே..... [5:38]
- விபச்சாரனும், விபச்சாரியும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே....... [24:2]
- ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கை கொண்டு ........................ [16:97 ] [40:40] [3:195] [ 9:72]
- ஆணாயினும் பெண்ணாயினும் நயவஞ்சகர்கள் ஒரே இனத்தவரே.[19:67.68]
- ஆணாயினும் பெண்ணாயினும் நயவஞ்சகர்களுக்கு நரகம்தான் [9:67.68]
- தான தர்மம் செய்யும் ஆண்க ளும் பெண்களும்..... [57:18]
- ஆகவே. ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி யார் நம்பிக்கை கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்கள் சுவனபதியில் நுழைவார்கள். இன்னும் அவர்கள் இம்மியேனும் அநியாயம் செய்யப்படமாட்டார்கள். [4:124]

✦ "நிச்சயமாக முஸ்லீம்களான ஆண்களும், பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும்; இறைவழிபாடுள்ள ஆண்களும். பெண்களும்; உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும்; பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும்; தர்மம் செய்யும் ஆண்களும். பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும்; தங்கள் வெட்கத்தலங்களை (கற்பைக்) காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும்; அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், பெண்களும் - ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் சித்தப்படுத்தியிருக்கின்றார்". [33:35]

**உனது இரண்டாவது கேள்வி : ஒரு பெண்ணும் ஒரு ஆணும் தனித்திருந்தால் அங்கே சைத்தான் புகுந்து விடுகிறான் என்பது உண்மையா?**

இக்கருத்து குர்ஆனுக்கு மாறானது. மேலும் அடிப்படையற்ற குற்றச் சாட்டாகும்.

ஒவ்வொருவர் குடும்பத்திலும் மாமா. மாமி. சித்தி. பெரியம்மா. சித்தி மகள். மைத்துனி அண்ணன், தம்பி மகள் அண்ணன் தம்பியின் மனைவிமார்கள் என்று ஏராளமான ஆண், பெண் உறவினர்கள் கூடி ஒரே குடும்பமாக வாழ்ந்து கொண்டு வருகிறது மனிதகுலம்.

இறைவேதம், மறுமை. இறை தண்டனை இவை பற்றி கற்பிக்கப்படாதவர்களும் தீய குணங்களை கண்டும் காணாமல் அலட்சியமாக இருக்கும் பெரியவர்களுடன் வசிப்பர்களும் கடவுளுக்கு அஞ்சாத ஆணோ. பெண்ணோதான் தவறான இச்சையுடன் ஒருவரையொருவர் நெருங்குவர். இறையச்சத்தைப் போதிக்காமல் தீய சந்திப்பை தடுக்க கட்டுப்பாடுகள் போட்டாலும் தவறு செய்ய நாடுவோர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வர்.

கடைத்தெருவில் விபச்சாரவிடுதி, சூதாட்ட விடுதி. மதுபானக்கடைகள், இன்னும் எத்தனையோ தீய இடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இறை பயமுள்ளவன் ஒரு போதும் அதை நெருங்குவதில்லை அல்லவா? அதுபோல்தான் வீடுகளிலும், பணியிடங்களிலும் தேவையின் நிமித்தம் ஆண், பெண் தனித்திருப்பதும், கண்ணியமான முறையில் நட்பு கொள்வதுமான ஒன்றாகும்.

ஆண், பெண் இருவருக்கும் கற்பு உண்டு. அதைப் பேணிக் கொள்ள வேண்டும் என்றும் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுங்கள் மானக்கேடானவற்றின் பக்கம் நெருங்காதீர்கள் என்றும். அனைத்தையும் அறிகின்ற இறைவனுக்கும், மறுமைக்கும் அஞ்சுங்கள் என்றும் குர்ஆன் அறிவுறுத்துகிறது. வழிகாட்டுகிறது.

நம்பிக்கை கொண்ட ஆண்களும், நம்பிக்கை கொண்ட பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர். அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள். தீயதை விட்டும் விலக்குகிறார்கள் [9:71]

**உனது மூன்றாவது கேள்வி : நரகத்தில் ஆண்களைவிட பெண்களே அதிகம்பேர் இருந்ததை நான் கண்டேன் என்று நபி கூறியதாக ஹதீஸ் இருக்கிறதா?**

ஆம். இருக்கிறது. மேலும் ஹதீஸ்கள் அனைத்தும் பொய்கள் தான் என்பதற்கு இதை ஒரு உதாரணமாகக் கூட கொள்ளலாம்.

நரகம் என்பது இன்னும் படைக்கப்படவில்லை என்றும் விசாரணை நாளுக்குப் பின்னரே அவை ஏற்படுத்தப்படும். அதற்கான எரிபொருள். கற்களும். மனிதர்களும் என்றும் நாம் குர்ஆனில் இருந்து அறிய முடிகிறது.

முஹம்மது நபி தனக்கு மறைவான விஷயம் எதுவும் தெரியாது என்றும். தன்னை என்ன செய்யப்படும். பிறரை என்ன செய்யப்படும் என்பதை நாம் அறிய மாட்டேன் என்றும் கூறும் குர்ஆன் வசனங்கள் இருக்கின்றன.

இதிலிருந்து நரகத்தைக் கண்டேன். பெண்களே அதிகம் பேர் வேதனை செய்யப்பட்டனர் என்பதெல்லாம் நபி மீது பொய்யாக இட்டுக் கட்டியது என்பது தெளிவு.

மற்றவை உன் அடுத்த கடிதம் கண்ட பிறகு

உனது பாசமிகு தந்தை

اِذْ تَبَرَّاَ الَّذِيْنَ اتُّبِعُوْا مِنَ الَّذِيْنَ اتَّبَعُوْا وَرَاَوُا الْعَذَابَ
وَ تَقَطَّعَتْ بِهِمُ الْاَسْبَابُ

166. Those who were followed will disown those who followed them. They will see the retribution, and all ties among them will be severed.

166. பின்பற்றப்பட்டவர்கள் தங்களைப் பின்பற்றியவர்களைக் கைவிட்டு விடுவார்கள். அவர்கள் தண்டனையைக் காண்பார்கள், மேலும் அவர்களுக்கிடையில் இருந்த எல்லாத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விடும்

وَقَالَ الَّذِيْنَ اتَّبَعُوْا لَوْ اَنَّ لَنَا كَرَّةً فَنَتَبَرَّاَ مِنْهُمْ
كَمَا تَبَرَّءُوْا مِنَّا ؕ كَذٰلِكَ يُرِيْهِمُ اللّٰهُ اَعْمَالَهُمْ حَسَرٰتٍ
عَلَيْهِمْ وَمَا هُمْ بِخٰرِجِيْنَ مِنَ النَّارِ

167. Those who followed will say, "If we can get another chance, we will disown them, as they have disowned us now." God thus shows them the consequences of their works as nothing but remorse; they will never exit Hell.

167. பின்பற்றியவர்கள் கூறுவார்கள், மற்றொரு சந்தர்ப்பம், நமக்குக் கிடைக்கக் கூடுமானால், இப்போது அவர்கள் நம்மைக் கைவிட்டு விட்டதைப் போலவே, நாம் அவர்களைக் கைவிட்டு விடுவோம். இவ்விதமாக அவர்களுடைய காரியங்களின் விளைவுகள் குற்றவுணர்வைத் தவிர எதுவுமில்லை என்று கடவுள் காட்டுகின்றார்; நரகத்தை விட்டு அவர்கள் ஒருபோதும் வெளியேற மாட்டார்கள்

*Satan Prohibits Lawful Things*

**அனுமதிக்கப்பட்டவற்றை ஷைத்தான் தடுக்கிறான்**

يَاَيُّهَا النَّاسُ كُلُوْا مِمَّا فِى الْاَرْضِ حَلٰلًا طَيِّبًا وَّلَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ اِنَّهٗ لَكُمْ عَدُوٌّ مُّبِيْنٌ

168. O people, eat from the earth's products all that is lawful and good, and do not follow the steps of Satan; he is your most ardent enemy.

168. மனிதர்களே, அனுமதிக்கப்பட்டதும் நல்லதுமான பூமியின் விளைச்சல்கள் அனைத்திலிருந்தும் உண்ணுங்கள், மேலும் சாத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்; அவன் உங்களுடைய மிகத் தீவிர மான விரோதியாக இருக்கின்றான்.

اِنَّمَا يَاْمُرُكُمْ بِالسُّوْٓءِ وَالْفَحْشَآءِ وَاَنْ تَقُوْلُوْا عَلَى اللّٰهِ مَا لَا تَعْلَمُوْنَ

169. He only commands you to commit evil and vice, and to say about God what you do not know.

169. அவன் கெட்டவற்றை மேலும் ஒழுக்கக்கேட்டைப் புரியும்படியும், கடவுள்-ஐப் பற்றி நீங்கள் அறியாதவற்றைக் கூறும்படியுமே உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்.

*Maintaining the Status Quo*
*A Human Tragedy*

**தொடர்ந்து அதே நிலையில் இருத்தல் - ஒரு மானுட சோகம்.**

وَاِذَا قِيْلَ لَهُمُ اتَّبِعُوْا مَآ اَنْزَلَ اللّٰهُ قَالُوْا بَلْ نَتَّبِعُ مَآ اَلْفَيْنَا عَلَيْهِ اٰبَآءَنَا اَوَلَوْ كَانَ اٰبَآؤُهُمْ لَا يَعْقِلُوْنَ شَيْئًا وَّلَا يَهْتَدُوْنَ

170. When they are told, "Follow what God has revealed herein," they say, "We follow only what we found our parents doing." What if their parents did not understand, and were not guided?

170. கடவுள் இதிலே வெளிப்படுத்தியுள்ளவற்றைப் பின் பற்றுங்கள், என அவர்களிடம் கூறப்பட்டால், அவர் கள் கூறுகின்றனர், எங்களுடைய பெற்றோர்கள் செய்கின்றதாக நாங்கள் கண்டவற்றை மட்டுமே நாங்கள் பின்பற்றுகின்றோம். அவர்களுடைய பெற்றோர்கள் புரிந்து கொள்ளா தவர்களாகவும், மேலும் வழிகாட்டப் படாதவர்களாக இருந்தாலுமா ?

وَمَثَلُ الَّذِيْنَ كَفَرُوْا كَمَثَلِ الَّذِىْ يَنْعِقُ بِمَا لَا يَسْمَعُ
اِلَّا دُعَآءً وَّنِدَآءً ۚ صُمٌّۢ بُكْمٌ عُمْىٌ فَهُمْ لَا يَعْقِلُوْنَ

171. The example of such disbelievers is that of parrots who repeat what they hear of sounds and calls, without understanding. Deaf, dumb, and blind; they cannot understand.

171. இத்தகைய நம்பமறுப்பவர்களின் உதாரணமாவது, தாம் செவியேற்கின்ற சப்தங்களையும் அழைப்புக்களையும், புரிந்து கொள்ளாமலே, திருப்பிக் கூறுகின்ற கிளிகளைப் போன்றதாகும். செவிடர்கள், ஊமையர்கள் மற்றும் குருடர்கள்; அவர்களால் புரிந்து கொள்ள இயலாது.

*Only Four Foods Prohibited*

**நான்கு உணவுகள் மட்டுமே தடுக்கப்பட்டவை**

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ
وَاشْكُرُوْا لِلّٰهِ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ

172. O you who believe, eat from the good things we provided for you, and be thankful to God, if you do worship Him alone.

172. நம்பிக்கை கொண்டோரே உங்களைத்தான், நாம் உங்களுக்காக வழங்கிய நல்ல பொருள்களிலிருந்து உண்ணுங்கள், மேலும் நீங்கள் அவரை மட்டுமே வழி படுபவர்களாக இருந்தால், கடவுள் - க்கு நன்றியுடையவர்களாக இருங்கள்.

إِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ الْمَيْتَةَ وَالدَّمَ وَلَحْمَ الْخِنْزِيْرِ
وَمَآ أُهِلَّ بِهٖ لِغَيْرِ اللّٰهِ فَمَنِ اضْطُرَّ غَيْرَ بَاغٍ وَّلَا عَادٍ
فَلَآ اِثْمَ عَلَيْهِ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

173. He only prohibits for you the eating of animals that die of themselves (without human interference), blood, the meat of pigs, and animals dedicated to other than God. If one is forced (to eat these), without being malicious or deliberate, he incurs no sin. God is Forgiver, Most Merciful.

173. (மனிதக் குறுக்கீடின்றி) தாமாகச் செத்த பிராணிகள், இரத்தம், பன்றிகளின் இறைச்சி, மேலும் கடவுள்-அல்லாத மற்றவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிராணிகளை மட்டுமே நீங்கள் உண்ணுவதற்கு அவர் தடை செய்கின்றார். வன்மத்துடனோ அல்லது வேண்டுமென்றோ இல்லாமல், (இவற்றை உண்ணுவதற்கு) ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டால், அவர் எந்தப் பாவத்திற்கும் உள்ளாவதில்லை. கடவுள் மன்னிப்பவர், மிக்க கருணையாளர்.

*Footnotes*

**2:172-173 Throughout the Quran only Four Meats are prohibited (6:145, 16:115, Appendix 16 ) ,Dieary Prohibitions beyond these four are tantamount to idol worship (6:121,148,150;7:32)*

அடிக்குறிப்புகள்

(2 : 172 - 173) குர்ஆன் முழுவதிலும் பார்ப்போமானால் நான்கே நான்கு விதமான மாமிச உணவுகள் மட்டுமே உண்பதற்குத் தடுக்கப்பட்டுள்ளன (6:145, 16:115, பிற்சேர்க்கை 16) இந்த நான்கிற்குப் பிறகும் வேறுவகை உணவுகளைத் தடுத்துக் கொள்வது இணைவைப்பிற்கு ஒப்பாகும். (6:121, 148, 150, 7:32)

# நேருக்கு நேர்

ஹதீஸ் கமாலுதீனும் - மன்சூரும் சந்தித்து உரையாடுகின்றனர்.

தன்னுடைய செயல், நடைமுறை, வியாபாரம் இப்படி அனைத்துமே ஹதீஸின்படிதான் இருக்க வேண்டும் என்று அமைத்துக் கொண்டு அதன்படியே வாழ்ந்து வருபவர்தான் கமாலுதீன்,

தவகீது, அஹ்லே ஹதீஸ், சுன்னத்வல் ஜமாத் போன்றோரின் மார்க்கக் கூட்டங்களில் ஒன்றைக் கூட தவறவிட மாட்டார். ஹதீஸ்களின் மீதிருந்த புலமை, பற்றுக் காரணமாக அவர் பெயரே ஹதீஸ் கமாலுதீன் என்று மாறிவிட்டிருந்தது.

ஹதீஸை மறுப்பவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டுமென்று முடிவெடுத்து அவர்களைச் சந்திக்க வந்திருக்கிறார்.

## உரையாடல் தொடர்கிறது.

மன்சூர் : ஸலாமுன் அலைக்கும் ஹதீஸ் கமாலுதீன் அவர்களே வாங்க..... வாங்க! சொன்ன நேரத்திற்கு சரியாக வந்து விட்டீர்கள்.

ஹதீஸ் கமாலுதீன் : ம்ம்ம்....

(காஃபர்களுக்கு ஸலாம் சொல்லக்கூடாது என்று மனதிற்குள் நினைத்தும்'.... மென்று சொல்லி கைகளை சற்று உயர்த்தியதோடு நிறுத்திக் கொண்டார்.)

ஹதீஸை மறுப்பவர்களை நான் மனிதர்களாக மதிப்பதில்லை.

சரி...... குர்ஆன் என்றால் என்ன அர்த்தம்? ஹதீஸ் என்றால் என்ன அர்த்தம் என்று தெரியுமா உமக்கு...?

மன்சூர் : 'குர்ஆன்' என்றால் படிக்கப்பட வேண்டியது' என்று அர்த்தம்.

ஆனால் தங்களைப் போன்ற பலர் அதை விடுத்து மற்ற அனைத்தையும் படிக்கிறீர்கள்.

'ஹதீஸ்' என்றால் 'செய்தி' என்று அர்த்தம். குர்ஆன்தான் அழகிய செய்தியாகும். என்றும் மேலும் இட்டுக்கட்டி வைத்த சில பொய்களை சிலர் ஹதீஸ் என்று கூறி ஏமாற்றுவார்கள் என்றும் இறைவன் குர்ஆனில் கூறி எச்சரிக்கிறார்.(31:6)

ஹதீஸ் கமாலுதீன் : (பிறரை மட்டந்தட்டியே பழக்கப்பட்ட கமாலுதீன் மன்சூரின் பதிலைக் கேட்டு ஆத்திரம் அடைந்தார். அதிகப்பிரசங்கித்தனம் வேண்டாம். குர்ஆன் மட்டும் போதும் என்கின்ற நீர் அதைக் கொண்டு மட்டும் பேசும்.

மன்சூர் : (பணிவாக) மறுபடியும் என் பதிலை ஞாபகப்படுத்திப் பாருங்கள். நான் குர்ஆன் வசனத்தைத் தானே கூறினேன்.

சரி இந்த வசனத்தைப் பாருங்கள்.

3:56 "எனவே, நிராகரிப்போரை இவ்வுலகிலும் மறுமையிலும் கடினமான வேதனையைக் கொண்டு வேதனை செய்வேன்; அவர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இருக்க மாட்டார்கள்."

ஹதீஸ் கமாலுதீன் : மேற்படி வசனத்தை படித்துக்காட்டி பின் என்னையே பார்க்கிறீரே ஏன்? ஈமான் கொண்ட எனக்கென்ன பயம். நிராகரிப்போர் தானே பயப்பட வேண்டும்.

மன்சூர் : அரபியில் இஸ்லாமியப் பெயர்கள் வைத்துக் கொண்டவர்கள். கலிமா. தொழுகை. நோன்பு போன்ற கடமைகளைச் செய்பவர்கள் தங்களை ஈமான் கொண்டவர்கள் என்று நம்புகின்றனர். ஆனால் குர்ஆனில் இறைவன் கூறுகின்றபடி ஈமான் கொண்டிருக்கிறோமா என்று நன்கு சிந்தனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஹதீஸ் கமாலுதீன் : உங்களுக்கு வேறு வேலையே இல்லையா? முஹம்மது ரஸூலுல்லாஹ் என்று அல்லாஹ்வுடன் இணைத்து கலிமா சொல்லக்கூடாது என்பீர்கள். இப்படி நடைமுறையில் இருக்கும் அனைத்திற்கும் ஏதாவது குற்றம் கண்டுபிடிப்பீர்கள். கேட்டால் குர்ஆன்தான் இப்படிக் கூறுகிறது என்பீர்கள்.

குர்ஆனை ஆய்வு செய்கிறோம் எனக் கூறி இது தப்பு, அது தவறு. இது இப்படி இல்லை என்று இஸ்லாத்தின் அடிப்படையான விஷயங்கள் பலவற்றை

கீரையை ஆய்வது போல் ஆய்ந்து ஆய்ந்து கழித்துக் கடைசியில் குர்ஆனும் இல்லை. அல்லாவும் இல்லை என்பீர்கள். அதுதான் நடக்க போகிறது.

மன்சூர் : சரி... உங்க கருத்துக்கு ரொம்ப சந்தோஷம். உண்மை எங்கிருந்தாலும் தேடி அடைய வேண்டுமென்ற ஆவல் மிகுதியால் சந்தித்துப் பேச வந்திருப்பீர்கள் என்று நினைத்தேன். ஆனால் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட உங்களோடு பேசிப் பயனில்லை. ஸலாமுன் அலைக்கும்......

ஹதீஸ் கமாலுதீன் : வருந்துகிறேன்........

ரொம்ப இறுமாப்போடு பேசிவிட்டேன். நிராகரிப்பு, இணைவைப்பு பற்றியும். ஹதீஸ்களில் என்ன தவறு காண்கிறீர்கள். என்பைதைப் பற்றியெல்லாம் உங்கள் கருத்தை அறியும் நோக்கத்தோடு தான் சந்திக்க வந்துள்ளேன். ஆனால் ஒரு நிபந்தனை. உங்கள் சுயவிளக்கமெல்லாம் வேண்டாம். குர்ஆன் வசனம் கொண்டு மட்டும் பதில் கொடுங்கள்.

மன்சூர் : சரி நண்பரே..... முதலில் ஹதீஸ் அல்லாமல் குர்ஆன் கூறுகிறபடி நல்ல முறையில் ஈமான் கொண்டுள்ளோமா என்று பார்ப்போம்!

3:57 “ஆனால், எவர் ஈமான் கொண்டு நற்கரு மங்களும் செய்கிறார்களோ, அவர்களுக்குரிய நற்கூலிகளை (அல்லாஹ்) முழுமையாகக் கொடுப்பான்; அல்லாஹ் அக்கிரமம் செய்வோரை நேசிக்க மாட்டான்.”

ஹதீஸ் கமாலுதீன் : ஹதீஸ் அல்லாமல் என்ற உங்களது வார்த்தையை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அல்லாஹ் வேதத்தையும். ஞானத்தையும் நபிக்குக் கொடுத்துள்ளதாக வரும் வசனத்தில் வேதம் என்பது குர்ஆன் என்றும். ஞானம் என்பது அதற்கு விளக்கமான ஹதீஸ் என்றும் பல அறிஞர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்! தெரியாதா உமக்கு? மேலும் நீர் கூறிய வசனத்தில் அக்கிரம் செய்வோர் என்று யாரைக் குறிப்பிடுகிறது என்கிறீர்கள்.

மன்சூர் : அறிஞர்களின் விளக்கம் இருக்கட்டும். முதலில் அல்லாஹ் கூறும் விளக்கத்தை கவனத்தில் கொள்ளுங்கள்.

3:58 "நாம் உம்மீது ஓதிக் காட்டிய இவை இறை வசனங்களாகவும்; ஞானம் நிரம்பிய நற்செய்தியாகவும் இருக்கின்றன.”

வேதம் என்பதும் ஞானம் என்பதும் குர்ஆன்தான் என்று இந்த வசனத்தின் மூலம் நன்கு புரிந்திருக்குமே!

மேலும் “அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டுபவனைவிட அக்கிரமக்காரன் யார்?” என்பது குர்ஆன் வசனம்.

இதிலிருந்து அக்கிரமம் செய்வோர் யார் என்று புரிகிறதல்லவா?

(ஹதீஸ்க்கு சாதகமாக தான் வைத்திருந்த மிகப்பெரிய ஆயுதமான ஞானம் என்றால் ஹதீஸ்தான் என்ற வாதம் ஆரம்பத்திலேயே பொட்டென்று அடிபட்டு விழுந்ததைக் கண்டு கமாலுதீன் திகைத்து விட்டார். இறைவனின் வார்த்தைகளை ஏற்பதா எதிர்ப்பதாட என்று குழம்பி தன்னை சுதாரித்துக் கொண்டு மீண்டும் பேசலானார்.

ஹதீஸ் கமாலுதீன் : நீங்கள் அப்படி இப்படி என்று ஹதீஸ்கள் பொய். இட்டுக்கட்டப்பட்டவை என்று சொல்வதிலேயே குறியாக இருக்கிறீர்கள். ஹதீஸ்கள் உண்மையானவைதான். என்பதில் எனக்கு எந்த ஐயப்பாடும் இல்லை.

மன்சூர் : வசனம் {3:60} ஐ கவனியுங்கள்.

"உம் இறைவனிடமிருந்து வந்ததே உண்மையாகும்; எனவே ஐயப்படுவோரில் நீரும் ஒருவராகிவிடாதீர்.”

அல்லாஹ்விடமிருந்து நபி மூலம் வந்தது குர்ஆன் மட்டும்தான். நம் அனைவரிடமும். பாதுகாக்கப்பட்ட நிலையிலும், மேலும் ஒரே ஒரு புத்தகமாக அது கண்ணெதிரே உள்ளது. ஆனால் ஹதீஸ்களோ லட்சக்கணக்கில். புத்தகங்களோ ஆயிரக்கணக்கில் உண்மையான ஹதீஸ்கள். பொய்யான ஹதீஸ்கள் இப்படி மேலும் பலப்பல முரண்பாடுகளை கொண்டும், குர்ஆனுக்கு மாற்றமாகவும் உள்ளது. சிந்தியுங்கள்.

ஹதீஸ் கமாலுதீன் : அரிசியில் கலந்துள்ள கல்லை பொறுக்கியெடுத்து விட்டு சமைத்து உண்கிறோம். கோழியை அதன் இறகு, கழிவு எல்லாவற்றையும் நீக்கிவிட்டு இறைச்சியை மட்டும் சாப்பிடுகிறோம்.

அதுபோலத்தான். ஹதீஸ்களில் தவறுகளை, பொய்யானவற்றை. கண்டறிந்து நீக்கிவிட்டு உண்மை ஹதீஸ்களை எடுத்து பின்பற்ற வேண்டும். எந்த தர்க்கத்திற்கும் நான் தயார்தான்.

மன்சூர் : அல்லாஹ்வின் வசனம் [ 3 : 56 ] இதற்கு பதிலளிக்க போதுமானது. பாருங்கள்

"உங்களுக்கு சிறிது ஞானம் இருந்த விஷயங்களில் நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தீர்கள்; உங்களுக்குச் சிறிதுகூட ஞானம் இல்லாத விஷயங்களில் ஏன் விவாதம் செய்ய முற்படுகிறீர்கள்? அல்லாஹ்தான்
அறிவார்; நீங்கள் அறிய மாட்டீர்கள்."

ஹதீஸ் கமாலுதீன் : [ 3:69 ] வேதத்தையுடையோரில் ஒரு சாரார் உங்களை வழிகெடுக்க விரும்புகிறார்கள்; ஆனால் அவர்கள் தங்களையே அன்றி வழிகெடுக்க முடியாது; எனினும். (இதை) அவர்கள் உணர்கிறார்களில்லை.
இந்த வசனம் குர்ஆன் மட்டும்தான் வழிகாட்டி என்கின்ற உங்களைத்தான் குறிப்பிடுகிறது. கவனியுங்கள்.

மன்சூர் : நிச்சயமாக இல்லை! குர்ஆனை மட்டும் பின்பற்றி நடங்கள். வழிகெட்டுவிடாதீர்கள் என்று நாங்கள் கூறுவது பிறரைக் கெடுப்பது ஆகாது.

இந்த வசனத்தை கவனியும். [ 3:70 ]

"வேதத்தையுடையவர்களே! நீங்கள் தெரிந்து கொண்டே அல்லாஹ்வின் வசனங்களை ஏன் நிராகரிக்கின்றீர்கள்?"

ஹதீஸ் கமாலுதீன் : சத்தியம் என்பது குர்ஆன் என்றும், அசத்தியம் என்பது ஹதீஸ் என்பது போலவும் மேலும் ஹதீஸை குர் ஆனுடன் கலக்கிறோம் என்பது போலவும் நீர் குற்றம் சாட்டுகிறீர்.... ஆதாரம் வைத்திருக்கிறீரா?

மன்சூர் : ஆம். அநேக ஆதாரங்கள் இருக்கின்றன.

1 நடைமுறையில் உள்ள ஐந்து கலிமா வாசகங்கள்;

2 தொழுகையின் இருப்பு நிலையில் ஓதப்படும் அல்லாஹும்ம ஸல்லி அலா...... என்னும் 'ஸலவாத்து'

3 அத்துஹியாத்து

4 சூரா பாத்திஹாவின் முடிவில் கூறும் 'ஆமீன்' இவையெல்லாம் குர்ஆனில் இல்லாதவைதானே. மனிதர்கள் தாங்களே ஆக்கி வைத்துக் கொண்டுள்ளவை தானே!

5 ஜும்மாவில் மிம்பர் மேடையிலே நின்று கொண்டு நாலுவார்த்தை அரபியில் அல்லாஹ்வை புகழ்ந்து விட்டு பின்னர் குர்ஆன் வசனங்களைக் கூறுவது போலவே நாவை அசைத்து அசைத்து ஹதீஸ்கள் என்னும் அசத்தியத்தை அரபியில் அழகுபடக் கூறி மக்களை ஏமாற்றி வருவது குர்ஆன் வசனங்களா!

6 திருமண மேடையில் குர்ஆனிலுள்ள சில வசனங்களை ஓதி அத்தோடு சேர்த்து அரபியில் 'அல்லாஹிம்ம பைனக்குமா ...... என்று நாவை அசைத்து சொந்தமாக புனைந்த துவாக்களை குர்ஆன் போலவே ஓதி வருவது அசத்தியத்தை சத்தியத்துடன் கலப்பதல்லாமல் வேறென்ன?

பட்டியலிட. நிறைய இருக்கிறது. உள்ளச்சமுடையோருக்கு ஒன்றிரண்டே விளங்கப் போதுமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அல்லாஹ்வின் வார்த்தைகளான வசனம் [3:78] ஐ கவனியுங்கள்,

“நிச்சயமாக அவர்களில் ஒரு பிரிவார் இருக்கின்றார்கள். அவர்கள் வேதத்தை ஓதும்போதுத் தங்கள் நாவுகளைச் சுழற்றி. ஓதுகிறார்கள். வேதத்தின் ஒரு பகுதிதானென்று நீங்கள் எண்ணிக் கொள்வதற்காக; ஆனால் அது வேதத்தில் உள்ளது அல்ல; அது , அல்லாஹ்விடம் இருந்து (வந்ததும்) அல்ல; இன்னும் அறிந்து கொண்டே அவர்கள். அல்லாஹ்வின் மீது பொய் கூறுகின்றார்கள்."

<u>ஹதீஸ் கமாலுதீன் :</u> ஹதீஸ்களைப் படிக்க செலவழித்த நேரத்தில் கொஞ்சமேனும் குர்ஆனை விளங்கிப் படிக்க நேரம் ஒதுக்கி இருக்கலாம் என்று இப்ப எனக்கு தோன்றுகிறது. குர்ஆன் உமக்கு கேடயமாக இருக்கிறது. வெத்து வாதம் செய்ய நான் அல்லாஹ்வுக்கு பயப்படுகிறேன். பின்னர் சந்திப்போம். அஸ்ஸலாமு அலைக்கும்.

<u>மன்சூர் :</u> ரொம்ப சந்தோஷம், ஸலாமுன் அலைக்கும்.



குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19 கேள்விகள்

## இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், **புதிய நினைவூட்டல்** புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய**
**இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662